இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்.” (கொலோ 3: 1-4)

# விவேகம் என்னும் நல்லொழுக்கம் ஏற்போம்!

## திருத்தந்தை வேண்டுகோள்

வத்திக்கான்: அன்பான சகோதர சகோதரிகளே காலை வணக்கம்.
நீதி, துணிவு, மற்றும் தன்னடக்கத்துடன் இணைந்து, நற்பண்புகளில் முதன்மையானதாக விவேகம் திகழ்கின்றது. விவேகம் கிறிஸ்தவர்களின் சிறப்புரிமை மட்டுமன்று, பண்டைய ஞானத்தின் பாரம்பரியமாகக் குறிப்பாக, கிரேக்கத் தத்துவ இயலாளர்களுடையதாகவும் கருதப்படுகின்றது. எனவே தான் சந்திப்பு மற்றும் வளர்ச்சியில் மிக முக்கியமான மற்றும் ஆர்வமுள்ள நல்லொழுக்கக் கருப்பொருளாக விவேகம் உள்ளது.

கிறிஸ்தவ பாரம்பரியத்தின் வெளிச்சத்தில் பார்த்தோமானால் பண்டைய ஆசிரியர்கள் நல்லொழுக்கத்தின் மிகமுக்கியமான ஏழு நற்பண்புகளை விவேகம், நீதி, தன்னடக்கம் துணிவு ஆகிய நான்கு முக்கிய நற்பண்புகளிலும், நம்பிக்கை, எதிர்நோக்கு, தொண்டு என்னும் மூன்று இறையியல் நற்பண்புகளையும் இணைத்துக் கூறினர். ஒவ்வொரு நல்லொழுக்கமும் நல்லிணக்கத்துடன் வாழும் இடமாகக் கருதினர்.

எனவே, விவேகத்துடன் நமது செயல்களைத் தொடங்குவோம். அது எப்பொழுதும் பயமுள்ளவரும் தயக்கத்துடன் செயல்களைச் செய்கின்றவருமான மனிதரின் நல்லொழுக்கமல்ல. அது தவறான விளக்கம். இது வெறும் எச்சரிக்கை மட்டுமல்ல. விவேகத்திற்கு முதலிடம் கொடுக்கும் மனிதனின் செயலானது சுதந்திரம் மற்றும் அறிவாற்றலுடன் செயல்படும் அவனது கரங்களில் உள்ளது.

விவேகம் உள்ள மனிதர் படைப்பாற்றல் மிக்கவர். சிந்தித்து செயல்படுகின்றார், மதிப்பிடுகின்றார். எதார்த்தத்தின் சிக்கல்களைப் புரிந்துகொள்கின்றார். உணர்ச்சிகள், சோம்பல், மனஅழுத்தம், மற்றும் மாயைகளுக்குள் தன்னை அவர் மூழ்கடிக்க மாட்டார்.



தோற்றங்கள், மேலோட்டமான எண்ணங்கள், நன்மை மற்றும் தீமை என்னும் இரண்டின் இயல்பான தன்மைகள் ஆதிக்கம் செலுத்தும் இவ்வுலகில், விவேகத்தின் பண்டைய வாழ்க்கைப்பாடம் நம்மை மீட்டெடுக்கத் தகுதியானது.
நமது செயல்களை நன்மையை நோக்கி வழிநடத்தும் திறன் கொண்டது விவேகம். எனவே தான் விவேகம் நற்குணங்களின் பயிற்சியாளர் என்னும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. புத்தகங்களுக்கு அதிக நேரம் செலவழித்தால், வாழ்க்கை எப்போதும் எளிதானது. அன்றாட வாழ்வின் புயல்காற்று, அலைகளுக்கு மத்தியில் வித்தியாசமான ஒன்றாக, தெளிவற்றவர்களாக எதைத்தேர்வது எந்தப் பாதையில் செல்வது என்ற குழப்பம் ஆகிய இரண்டில் சரியானவற்றைத் தேர்வு செய்வதில் திறன் பெற்றவராகின்றார் விவேகம் உள்ளவர்.
விவேகமுள்ளவர்கள் தற்செயலாக எதையும் தேர்ந்தெடுப்பதில்லை: முதலில் அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்கள் நன்கு அறிந்துள்ளார்கள். சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்கிறார்கள், ஆலோசனையைப் பெறுகிறார்கள், பரந்த பார்வை மற்றும் உள்மன சுதந்திரத்துடன், எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதைத் தேர்வு செய்கிறார்கள். அவர்கள் தவறே செய்ய முடியாது என்று நாம் சொல்ல முடியாது, எல்லாவற்றிற்கும் மேலாக விவேகமுள்ள மனிதர் எப்போதும் மனிதத்துவம் உள்ளவர்களாகவே இருப்பதால் குறைந்தபட்சம் வாழ்வின் பெரிய சறுக்கல்களைத் தவிர்க்க அவர்களுக்கு உதவுகின்றது.

ஒவ்வொரு சூழலிலும் மேலோட்டமான நகைச்சுவைகளால் பிரச்சினைகளை நிராகரிப்பவர்களோ அல்லது எப்போதும் பிரச்சனைகளை எழுப்பு பவர்களோ இருக்கத்தான் செய்கின்றனர். விவேகம் என்பது நிர்வாகம் செய்ய அழைக்கப்பட்டவர்களின் தரம். நிர்வாகம் செய்வது கடினம், அதனைப் பற்றிய பல கருத்துக்கள் உள்ளன, அவற்றை ஒன்றிணைக்க முயற்சிக்க வேண்டும், சிலருக்கு மட்டுமல்லாது எல்லாருக்கும் நல்லது செய்யவேண்டும்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

# அடிப்படை இறையியல் கல்வியின் 2 ஆம் அமர்வு

கோலாலம்பூர்: நீண்டகால ஆர்வத்திற்கும் தேடலுக்கும் பதிலாக அடிப்படை இறையியல் கல்வி கற்பதற்கான ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்த விரும்புகிறேன். இதன் 2ஆம் அமர்வு கடந்த 16/03/2024 அன்று காலை 9.00 மணிக்கு அருள்சகோதரி ரீத்தா மற்றும் முனைவர் ஸ்டீபன் அவர்களின் குழுவினரால் செப வழிபாட்டுடன் வகுப்பு ஆரம்பமாகியது. தொடர்ந்து பங்கேற்பாளர்கள் ஒருவர் மற்றவருடன் உரையாடி அவர்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ளும் கற்றல் செயற்பாட்டுடன் கற்பித்தல் உத்வேகத்துடன் தொடங்கியது.

கடவுள் தம்மை மனிதர்களுக்கு எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதைப் புரிந்து கொள்ள திரு நூல் மற்றும் திரு அவையின் இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியத்தைக் கொண்ட திரு மரபு எவ்வாறு இரு இறக்கைகள் போன்று அமைந்திருக்கின்றன என்பதைப் பல எடுத்துக்காட்டுகள் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையின் தேடல், அறிந்து கொள்ளும் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு தனது விளக்கங்களை முனைவர் ஸ்டீபன் அவர்கள் வழங்கியிருந்தார்.

உலகம் (படைப்பு) மனிதர் மற்றும் அறிவுத்திறன் ஆகிய மூன்று வழிகளில் கடவுளின் வெளிப்பாடு அமைந்திருந்தாலும், மனிதர்களால் கடவுளை முழுமையாக அறியமுடியாது என்பதனை சிறப்பாக விளக்கிக் கூறியதுடன். நாம் பின்பற்றும் சடங்குகள் மற்றும் முறைமைகள் எவ்வாறு நமக்கு அளிக்கப்பட்டன என்பதையும்



சு.யூ.யூலியன்

அவற்றின் முக்கியத்துவத்தையும் கலந்துரையாடல்கள் மற்றும் பகிர்வுகளின் வழியாக கற்பித்தமை வகுப்பிற்கு மேலும் சிறப்பை கொடுத்தது.

கடவுள் தம்மைப் படிப்படியாக வெளிப்படுத்தி இயேசுவில் தம்மை வெளிப்படுத்திய பின்னர் வேறு வெளிப்பாடு இல்லை என்பதுடன் இயேசுவே கடவுளைப் பற்றியும் அவரது மீட்புத் திட்டத்தைப் பற்றியும் கற்றுக்கொடுத்தார்.

சமாரியப் பெண்ணின் கதை வழியாக நாம் கற்றுக்கொள்ளும் பாடம் மற்றும் வெளிப்பாடு பற்றிய கலந்துரையாடலும் மேலும் பல விளக்கமளிப்பும் இரண்டாம் அமர்வை முழுமைப்படுத்தியிருந்தமை

*தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்*

# ‘மகிழ்ச்சியாக வாழ்வது, மனித உரிமைகளில் ஒன்று’

### உலக மகிழ்ச்சி தினச் செய்தி!

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20ஆம் தேதி உலக மகிழ்ச்சி தினம் கொண்டாடப்படுகிறது.
ஏன் மார்ச் 20 ஆம் தேதியில் உலக மகிழ்ச்சி தினத்தை சிறப்பிக்க வேண்டும் என நீங்கள் கேட்கலாம். அந்த நாளுக்கென ஒரு சிறப்பு உண்டு. அது இளவேனிற்காலத்தின்,



அதாவது, வசந்த காலத்தின் துவக்க நாள். அந்த நாளில் பகலும் இரவும் சரிசமாக இருக்கும். இதனால்தான் இந்த நாளை, உலகின் மகிழ்ச்சி தினமாகச் சிறப்பிக்க தேர்ந்தெடுத்திருக்கிறது ஐ.நா. நிறுவனம்
.
மகிழ்ச்சியாக வாழ்வது, மனித உரிமைகளில் ஒன்று. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவை, 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம், உலக மகிழ்ச்சி நாளை உருவாக்கியது. அந்த அவையின் அறிவிப்பின்படி, ஒவ்வோர் ஆண்டும், மார்ச் 20ஆம் தேதி, ஒவ்வொரு தலைப்பில், உலக மகிழ்ச்சி நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. ‘ஒன்றிணைந்து மகிழ்ச்சிகாணல்’ என்பது இவ்வாண்டிற்கான தலைப்பாக எடுக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டிற்கான இந்த தலைப்பு, நீடித்த நிலையான மகிழ்ச்சி என்பது சமூகத்தில் நம் உறவுகளிலிருந்தும் ஈடுபாட்டிலிருந்தும் பிறக்கிறது என்பதை வலியுறுத்திக் கூறுகிறது.

**மகிழ்ச்சி என்பது என்ன?**

மகிழ்ச்சி எது எனக் கேட்டால் ஒவ்வொரு மனிதரும் ஒவ்வோர் அர்த்தத்தைக் கூறுவர். போர் மற்றும் வறுமையை உலகளவில் முடிவுக்குக் கொண்டுவருவதே மகிழ்ச்சி என ஐ.நா. நிறுவனம் கருதுகிறது. மகிழ்ச்சியே மனிதனின் அடிப்படை இலட்சியம் என்கிற அடிப்படையில் ஐ.நா. பொதுஅவை மார்ச் 20ஆம் தேதியை அனைத்துலக மகிழ்ச்சி தினமாக அறிவித்துள்ளது.

மகிழ்ச்சி என்பது ஓர் உணர்ச்சி, அதனை யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாது. நமது ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியை நோக்கித்தான் இருக்கிறது. மகிழ்ச்சி எல்லாவித மாற்றங்களையும் கொண்டு வரக்கூடியதாகும். எப்போதும் வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பது நமது ஆயுளை கூட்டும் என்பது நாம் அறிந்ததே.
மகிழ்ச்சியைப் பெறும் நோக்கத்துடன் செய்யும் எல்லா செயல்களும் மகிழ்ச்சியைத் தந்துவிடாது. பிறருக்குத் தீங்கு விளையக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் செய்யும் செயல்களே மகிழ்ச்சியை அளிக்கும். அப்படி தீங்கற்ற செயல்களால் தன்னை உருவாக்கிக் கொள்பவர்கள் வாழ்வில் வெற்றிகாண்பர்.

பொதுவாகவே மகிழ்ச்சிக்கும், சிரிப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மகிழ்ச்சியின் அடிப்படையாக உணரப்படுவது சிரிப்பு. எனவே சிரிப்பதன் மூலம் மகிழ்ச்சியைத் தூண்ட முடியும். சிரிப்பு ஆரோக்கியம் தருவதாக, தற்போதைய மருத்துவ கண்டுபிடிப்புகள் கூறுகின்றன. மனநிலையை மகிழ்ச்சியாக பராமரிப்பதன் வழியாக, சிரிப்பையும், ஆரோக்கியத்தையும் வாழ்வில் தக்க வைக்க முடியும். நம்மால் முடித்த அளவு பிறருக்கு உதவி செய்வதன் வழியாக மகிழ்ச்சியை பெறவும் முடியும், பிறருக்கு தரவும் முடியும். மனதை இலகுவாக வைத்துக் கொள்ளுங்கள். எதுவும் பாதிக்க விடாதீர்கள். மோசமான அனுபவங்களை மனதில் இருந்து விலக்கி வையுங்கள்.

*முதல் பக்கத் தொடர்ச்சி.*

குறிப்பிடத்தக்க ஒரு விளக்கமளிப்பாக அமைந்திருந்து. அருள்சகோதரி ரீத்தா அவர்களின் துணையும் வழிகாட்டலும் கற்போரையும் கற்பிப் போரையும் கவர்ந்த விதம் வகுப்பிற்கு உவப்பூட்டியதுடன். சிலுவைப்பாடுகளை நினைவு கூர்ந்த இறுதிச் செபம் தவக்கால சிந்தனையில் பயணிக்க வழிகாட்டியதுடன் மாலை 4 மணிக்கு அமர்வு இனிதே நிறைவெய்தியது.

சூ.யூ.யூலியன்

# இறையழைத்தல் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி!

**வத்திக்கான்:** கடந்த மார்ச் மாதம் 21ஆம் தேதி இறையழைத்தலுக்கு இறைவேண்டல் செய்வதற்கான 61வது உலக தினத் திற்கென மார்ச் 19 சிறப்பு செய்தி வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் இறையழைத்தலை ஏற்று தங்களை அர்ப்பணிக்க முன்வரும் சகோதரர் சகோதரிகளையும் இந்நேரத்தில் நன்றி யுடன் நினைத்துப் பார்ப்பதாக தன் செய்தியில் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ்



அவர்கள், ‘அமைதியை கட்டியெழுப்பவும், நம்பிக்கையின் விதைகளை விதைக்கவும் அழைப்புப் பெறுகிறீர்கள்’ என்ற மையக் கருத்தை முன்வைத்துள்ளார்.

நாம் யார், நம்முடைய கொடைகள் என்னென்ன, அவைகள் கனிதர நாம் செய்ய வேண்டியதென்ன, அன்பு, தாராள ஏற்புடைமை, அழகு, அமைதி என்ற கருவிகளின் அடையாளமாக நாம் விளங்க தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை என்ன என்பதையெல்லாம் நாம் கண்டுகொள்ளும்போது நம் வாழ்வு நிறைவுள்ளதாக மாறுகின்றது என உரைக்கும் திருத்தந்தை, மற்றவர்களுடன் ஒத்துழைப்பு உணர்வுடன் சேவையாற்றுவோரையும், நீதியான உலகையும், ஒருமைப்பாட்டு பொருளா தாரத்தையும், சரிசமமான சமூகக் கொள்கைகளையும், மனிதாபிமானம் நிறைந்த சமுதாயத்தையும் கட்டியெழுப்ப உழைப்போரையும், இவ்வேளையில் நினைவுகூர்வதாகத் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையின் விதைகளை விதைக்கவும், இறையரசின் அழகை வெளிப்படுத்தவும் அவர்கள், தன் கருத்தை நம் மீது திணிக்காமல், அதனை ஒரு பரிந்துரையாக முன்வைக்கும் இயேசுவின் அழைப்புக்கு இளையோர் தகுந்த பதிலுரை வழங்க வேண்டும் எனற அழைப்பையும் முன்வைத் துள்ளார்.

நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ள தனிவரங்களின் துணைகொண்டு, ஒருவருக்கொருவர் செவிமடுத்து, ஒன்றி ணைந்து நடைபோட்டு, அனைவருக்கும் பயன்தரும்வகையில் தூய ஆவியானவர் நம்மை வழிநடத்திச் செல்லும் பாதையைக் கண்டு கொள்வோம் எனவும் தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம்பிக்கையுடன் 2025ஆம் ஜூபிலி ஆண்டை நோக்கி ஒன்றிணைந்து நடை போடுவோம் என்ற அழைப்பை முன் வைக்கும் திருத்தந்தை, அறுவடைக்கு ஆட்களை அனுப்பும்படி இறைத்தந்தை யிடம் செபிக்கவேண்டிய நம் கடமை யையும் வலியுறுத்தியுள்ளார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ்- வத்திக்கான்*

# நமது உள்ளக் கல்லறை வெற்றுக் கல்லறையாகட்டும்!

இன்று ஆண்டவரின் உயிர்ப்புப் பெரு விழாவைக் கொண்டாடுகிறோம். இன்றைய நாள் கிறிஸ்தவம் துளிர்விட்ட நாள். எல்லாம் முடிந்துவிட்டது என்று முடங்கிப் போன சீடர்களுக்கு புதுவிடியல் தந்த நம்பிக்கையின் கல், கல்லறையினின்று புரட்டப்பட்ட நாள். நம் நம்பிக்கையையும் புதுப்பிக்க அழைப்புவிடுக்கும் நாள்.

சென்ற இடமெல்லாம் நன்மை செய்த இயேசுவுக்கும், அவரது உயிர்ப்புக்கும் நாங் களே சாட்சி என்று கூறும் புனித பேதுரு வின் நம்பிக்கையளிக்கும் இறைவார்த் தைகளை நம்முன் வைக்கிறது இன்றைய முதல் வாசகம். இரண்டாம் வாசகத்தில், ‘கிறிஸ்துவே நமக்கு வாழ்வு அளிப்பவர்’. எனவே, நம் வாழ்வு இவ்வுலகு சார்ந்த வையாக இல்லாமல், மேலுலகு சார்ந்தவையாக இருக்க வேண்டும் என்று கொலோசை நகர மக்களுக்கு அறிவுறுத் துகிறார்.

இன்றைய நற்செய்தி ஆண்டவரின் உயிர்ப்பை எடுத்துரைக்கிறது. ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது; ஆர்ப்பரித்து அகமகிழ வேண்டிய நாளிது. இயேசு உண்மையாகவே உயிர்த்தெழுந்தார் என்ப தற்கு நம்மிடம் இருக்கும் முதன்மையான சான்று வெற்றுக் கல்லறையாகும். ஆம், வாரத்தின் முதல்நாளில் இயேசு அடக்கம் செய்துவைப்பட்ட கல்லறைக்கு வந்த மகதலா மரியா, அங்கு கல்லறையை மூடியிருந்த கல் அகற்றப்பட்டு, கல்லறை வெறுமையாக இருப்பதைப் பார்த்தார்.

பவுலடியார் இன்னும் ஒரு படி மேலே சென்று, “கிறிஸ்து உயிருடன் எழுப்பப் படவில்லை என்றால், நாங்கள் அறிவித்த நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் வீண்: ( 1கொரி 15:14) என்று சொல்லி, இயேசுவின் உயிர்ப்பில்தான் திருஅவை கட்டியெழுப்பப் பட்டிருக்கின் றது என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார்.

காலியான கல்லறை, துணி, உயிர்ப்பின் மறையுண்மையை எடுத்துறைக்கும் நற்செய்தியை நம்புவோம். நம் அன்றாட வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகள், கேட்கும் சொற்கள், தொடர்பு கொள் ளும் மனிதர்கள், அனுபவிக்கும் இன்ப துன்ப அதிர்ச்சி நிகழ்வுகள், அத்தோடு மகிழ்ச்சி அனைத்தும் இன்றைய நிகழ் வின் அடையாளங்கள்தான். அனைத் திலும் ஆண்டவரின் உடனிருப்பை அறிவோம். இவற்றில்தான் உயிர்ப்பின் இயேசுவைக் காண, தேடி செல்லும் பக்குவத்தை பெற்றிடுவோம்.

புனித பவுல் கொலேசையருக்கு வலியுறுத் துவதை நாமும் மனதில் கொள்வோம். கிறிஸ்துவின் பால் நாம் கொண்டுள்ள நம்பிக்கை, அவரது பெயரால் திருஅவை வழங்கும் அருட்சாதனங்களில் நமது ஈடுபாடு போன்றவை, உயிர்ப்பு வாழ்வு நம்மில் வெற்றி பெற வழி வகுக்கிறது. உயிர்த்த இயேசு மீண்டும் வெற்றி வாகையோடு இறுதி நாளில் வருவார் என்பது உறுதி. அப்போது உயிர்ப்பு வாழ்க்கை வாழ்ந்தவர் அனைவரும் இயேசுவோடு மாட்சிமையில் தோன்று வார்கள். அதுவே உயிர்ப்பு வழ்வின் நிறைவு.

**ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தி.ப. 10: 34a, 37-4 |
| திரு.பாடல் | 118: 1-2. 16-17. 22-23 |
| 2-ம் வாசகம் | கொலோ 3: 1-4 |
| நற்செய்தி | யோவான் 20: 1-9 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- பாஸ்கா ஞாயிறு**

இயேசுவின் உயிர்ப்பை மக்களுக்கு அறிவிக் கின்றபோது திருத்தூதர்கள் குறிப்பாக பேதுரு, ‘இவற்றிற்கு நாங்கள் சாட்சிகள்” என்பார். சாட்சிகள் என்று முழங்கினார். அதே முழக்கத்திற்கு உரியவர்கள் நாம். இயேசு உயிர்த்துவிட்டார் என்று அறிந் திருப்பதும் நம்புவதும் மட்டும் போதாது, அறிந்ததை அடுத்தவருக்கு அறிவிக்க வேண்டும். அதனை நம்முடைய வாழ்வாக்க வேண்டும். அதுவே கிறிஸ்துவுக்கான நமது சாட்சிய வாழ்வு.

*ஆ.வி.டேவிட், குளுவாங்*